# ஆதி மார்க்க னீதி மொழி

December 2023

இதழ் 29 – டிசம்பர் மாதம் 2023 வெளியீடு

© AMNA Trust, Chennai



Copyright © AMNA Trust, Chennai



### மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்திருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, ஆதி மார்க்க னீதி மொழியின் 29ஆம் இதழ் உங்கள் கைகளில் மலர்ந்துள்ளது. ஆதி வேதமாகிய ரிக் வேதம் முதல் ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் வரையிலும், இவற்றின் உட்பொருள் ஆதார உயிர் பதிப்பு நிலைகளாக மூல மந்திரமாக விளங்கும் பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், கலிமா, பிரணவம், காயத்ரி இவற்றின் ரகசியங்கள் யாவும் ஒவ்வொரு வாரமும் தொகுத்து வழங்கப்பெற்றுள்ளது. இதனை உளமாரக் கேட்கும் மக்களுக்கு இத்தனை செயல்களும் னிஜமாக்கப் பெற்றுள்ளது. இதுவரை நமது அவையின் அங்கங்கள் பேசி வந்த பைபிள் யோக வாசிஷ்டம் பகவத் கீதைக்கு அடுத்தபடியாக நமது அங்கத்தினர் பானுமதி குமரேசன், உளப்பூர்வமாக தான் உணர்ந்த திருக்குரானின் சிறப்பை இஸ்லாம் மக்களும் பாராட்டும் வண்ணம் அருமையாக தொகுத்து வழங்கியுள்ளது இம்மாதத்தின் சிறப்பாகும். சர்வ மூலமந்திரங்களின் நிரூபிக நிரூபகராக நின்று விளங்கும் பரிசுத்த ஆவித் தெய்வம் இன்றும் அதை ஓதி உணர்ந்த மக்களுக்கு நல்வழி காட்ட அழியாத மெய்வழியின் சிறப்பை பல நிலைகளில் அருளிக் கொண்டே இருக்கிறார்கள்.

வித்து நாயகமாகிய பரிசுத்த ஆவித் தெய்வம் விதைத்த வித்து விளைந்து வந்து எங்களையும் ஆட்கொண்டதின் அடையாளமான மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் அய்யா அவர்களின் திருவடியைப் போற்றி வணங்கும் நாளாக அவர்களின் அவதாரத் திருநாள் இம் மாதத்தின் மிகப் பெரிய சிறப்பாக இந்த இதழில் வழங்கப் பெற்றுள்ளது. மேலும் அவர்களின் அவதாரத் திருநாள் தினத்தில் பிறந்தநாள் காணும் அவையின் அங்கங்களுக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

உரை கிளம்பவும் உள்ளமும் தித்திக்க என ஆண்டவர்கள் அருளியுள்ள படி இதனைக் கேட்டு பார்த்து படிக்கும் மக்கள் அனைவருக்கும் பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய அத்தனை செயல்களும் நிஜமாகி உள்ளத்தின் ஐயப்பாடுகள் நீங்கி மெய் உணர்வுடன் வாழ எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்குகிறேன்.

நமஸ்காரம்.

சாலை ரவி

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai

*மூச்சு லயமாகிய மனோலயத்தைச் செய்து வைப்பவரே குரு. அதை அவர்கள்பால் பெற்றுக் கொள்பவனே மறுபிறப்பாளன்.*

*ஒவ்வொரு மனிதனும் ஈசனுடைய ரூபத்தில் படைக்கப் பெற்றுள்ளான். அவனவன் செயலாலேயே மனுஈசன் அல்லது மனுனீசன் ஆகிறான். உப்பு னாவில் இல்லாவிட்டால் உப்பை உணர முடியுமா? அது போலவே னம் உள்ளத்தில் தேவஞானம் ஆதியிலே படைக்கப் பெற்றிராவிட்டால் ஞானத்தை இன்று னம்மால் உணரமுடியாது. வித்தியா தத்துவ மென்றும், அமானிதம் என்றும் சொல்லப்பெறும் அந்த மெய்ப்பொருள் மனிதனிடத்தில் தான் இருக்கிறது. எவ்வளவு வலிமையுடைய மிருகமாயினும் அதனிடத்தில் அது கிடையாது. அந்த மெய்ப்பொருளைக் கைப்பற்றிக் கொண்டவர்களே மனுஈசன் என்ற பதத்தில் ஆகின்றவர்கள்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 நவம்பர் மாத அவை நிகழ்வுகள் – 2023 டிசம்பர் மாத வெளியீடு

**02-11-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்**:

குரு அருளால் அரிய பிறப்பான மனு ஆனவனே அறிவு இன்னதென அறிந்தவன். மானிட தோற்றத்துடன் பொய்ப்பொருள் நாட்டம் கொண்ட நரன், தன் கடமையில் இருந்து தவறுகிறான். புலன், பொறிகளுக்கு தலைவனாகிய மனம், மேல் நோக்காகும் போது நிர்குணமாகவும், உலகப்பற்று கொண்டபோது முக்குணமாகவும் உள்ளது. நிர்குணமே மெய்வணக்கத்தின் பலன். தன்னை அறியும் கடமை மறந்த ஒருவனுக்கு, காலத்தை மூலதனமாக கொண்டு பெரியோர்கள் செய்த நன்றி ஞாலத்தின் மானப் பெரிதாகும். நமது கலாச்சாரம், நாகரீகம், கல்வி அனைத்தும் அறியாமையையே வளர்க்கிறது. ஆகம விதிகளும் பெரியோர்களும், காட்டும் வழி மனிதன் மரணமற்ற பேரின்ப வாழ்வு வாழ்வதற்கே. ஞானத்தையும் குணத்தையும் தேடுகின்ற கடமை கொண்ட மனிதனுக்கே அது கிட்டுகிறது.

**திருமெய்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் 1:** திருவள்ளுவ நாயனார், தெய்வ மெய்க்கல்வி கலாசாலையில் நமக்கு முன்னர் தேர்ச்சியுற்று வந்தவர். அவர் படைத்த கொரலுக்கு தாயாதியர், இறை திருவடிசேர் தேவர்களே. உலக மக்கள் உய்வதற்கே உரைத்த கொரல், தேவர்களுக்கு மெய்ப்பொருளும், மற்றவர்க்கு பொம்மை அருத்தமும் வைத்து படைத்ததென காண். இவை உலகமே உய்ய. இப்படிக்கு **சாலை ஆண் குரு**.

**குருபிரான் அருளமுதம்:** தேரைந்து மந்திரம் கைக்கொண்ட தேவர்களுக்கு ஆன திருக்கொரல் இதுவாகும். மனிதன் தன்னை அறிவதற்கான வழிவகை கூறுவதே திருக்கொரல். வேத சாட்சியாக முருகப்பெருமானே சாலை ஆண்டவர்களாக வந்தவர்கள். ஆதலால் திருவள்ளுவரும் அவர்கள் முன்னிலையில் கற்றுத் தேர்ந்தவரே. அறிவுக்கு ஆகாரம் அறிவு வடிவாக வரும் பெரியோர்களின் வாய்மையே.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குர்ஆன் அத்தியாயம் - 4: ஹன்னிசா**: பெண்களின் சொத்து, பாகப்பிரிவினை, விவாகரத்து, நன்னடத்தை பற்றி பேசுகிறது.
**வசனம் : 1** மனிதர்களே இறைவனுக்கு அஞ்சுங்கள். இறைவன் ஆத்மா ஒன்றிலிருந்தே ஆண் பெண்ணை படைத்து பலவாக விரியச் செய்தான். சமுதாயத்தில் ஏற்படும் பிணக்குகளுக்கு உரிய தீர்ப்பு பெறுவதற்குரிய இடம் இறை தூதரான நபிகள் நாயகம் தான். **வசனம் : 2** அனாதை பெண்களுக்கான பல சட்ட திட்டங்களை கொண்டது. **வசனம் 4:** வரையறுக்கப்பட்ட ஆண்-பெண் திருமண சட்டங்களுக்கானது. **வசனம் 7:** தந்தை தாய் இருவரின் சொத்துகளில் ஆண், பெண் இருவருக்கும் பங்கு உண்டு என்ற நபிகள் நாயகம் வரையறுத்த முகம்மதியர் சட்டம் இன்று வரை வழக்கத்தில் உள்ளது. **வசனம் 15,16:** தற்கொலையை வன்மையாக கண்டிக்கும் அல்லாஹ், பாவ மன்னிப்பை ஏற்றுக் கொள்ளும் கருணைமிக்கவன்.

**குருபிரான் அருளமுதம்:** சரிகத் ஒழுக்கத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து, ஒட்டுமொத்த உலக மக்களுக்காக எடுத்துரைக்கப் பெற்றதே **அல்குர்ஆன்** வேதமாகும்.

**குருபிரான் அருளமுதம் - ஐம்மணிப் பொதிகை: சரமதுவே சமரச சன்மார்க்க பஞ்ஞாட்சரமே...** நாசி வெளியே மூச்சு ஓடா நிலையே சரம். தாவுகின்ற செயலுடைய மனம் சதா சலனத்திலும், விகல்பத்திலும் உள்ளது. மனதுடன் சேரும் சரமே கால் ஆகிறது. அழிவிலிருக்கும் சரத்தை அழியாமைக்கு ஆக்குவது தான் சரமதுவே சமரச சன்மார்க்க பஞ்ஞாட்சரம். சாலோகம், சாமீபம், சாரூபம் என்பது செத்த இடமாக, பிறந்த இடமாக, இனிச்சாகாத இடமாக உள்ளது. **கு** எனும் அறியாமை மரிக்கும் செயல் ஏகாட்சர நாயகரின் திருக்கரத்தில் னாத மருந்தாக உள்ளது. படைக்கு தலைவன் போல், தேகத்தின் 96 தத்துவத்திற்கும் தலைவன் இருக்கிறான். மேல்-கீழ்-நடு உலகே பட்டணமாக உள்ளது. வாசம்



Copyright © AMNA Trust, Chennai	

ஒளிர் சிரசது நாலான பஞ்ஞாட்சரம் பரமாக, பார்பதியாக உள்ளது. பரிபாஷை என்பது எழுதாத எழுத்தாக, ஜீவனின் ரகசியமாக, சகல பாஷைகளையும் அறியக் கூடியதாக உள்ளது. பிறந்த சவத்தில் ஜீவனாகிய சக்தி குடியேறியதும் உமை ஒரு பாகமாகிறது. கடல் முரசு போல ஒலிக்கும் பெரியோர்களின் **நாதம்** கரையாகிய எமனைக் கடந்து பதியின் திசையை காட்டுகிறது. அதுவே ஜாதி, மத, குலங்களுக்கு அப்பாற்பட்டு பல ஜென்மங்களாக தன்னுயிரை அறியாத பாவியாக இருந்தவனின் தாகம் தீர்க்கிறது. வீண் மனுவை ஈசனாக்கி நல்வீடடைய வைக்கிறது. தேள் கொடுக்காம் குலதெய்வம், மனிதனுக்கு பிரகாசம் தரும் பஞ்ஞாட்சரமாக, அஷ்டாட்சரம், பிரணவம், காயத்ரி, கலிமா எனும் பல நாமம் கொண்டது. இடப்பாதம் ஊன்றி வலப்பாதம் தூக்கிய நடராஜரின் தத்துவ உருவம் ஜீவனின் ரகசியமாகும் என குருபிரான் அருளி ஸ்தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

## 04-11-2023 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தனித்த னற்றலைமை பெரும்பதி அரசை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* தனித்தலைமை பெரும் பதியாகவும், அரசு பீடமாகவும் நின்று விளங்கும் இறைபொருளாகிய உயிருக்கு ஈடேதுமில்லை என்ற மெய்மையை உணர வைக்கும் குருபிரானே சிங்காசனர். அவர்களின் னன்னாதமே, தெவிட்டாத தேனமுத முக்கனிச்சாறு சுவையுடன் பூங்கார மணமும் சேர்த்து ஆணிப் பொற்கிண்ணத்தில் நமக்கு அளிக்கும் மெய்வழித்துணை மருந்தாகும் என்ற அகமிய செயலை ஆண்டவர்கள் இத்திருப்பாடலின் மூலம் அருளியுள்ளார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - வாக்கியம் எண்: 150** அன்பும் சிவமும் ஒன்றென உணர்ந்த மக்கள், உயிரின் லட்சணமும் மெய் வணக்கத்தின் மேன்மையும் அறிந்த ஆசானின் அங்கங்களாய் வாழும் ஜீவபிறவியர்கள் தங்களுக்குள் எள்ளளவும் குற்றமது இசைக்காத அன்புடன் வாழ வேண்டும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம்: மத்தேயு – அதிகாரம் :10 திருவசனம் :28** னான் என்பது தன் உடலென எண்ணி, அவாவினால் தன் சரீரத்தை கொல்கிறவனைப் பார்த்து பயப்பட வேண்டாம். அழியாப் பொருளாகிய ஆத்மாவே னான் என்பதையும், அதற்கு ஆதாரமாக தரப்பெற்றதே இச்சரீரம் என அறிந்த பின்பும் னம்பிய தன் உயிரை தற்கொலை செய்து ஊறுபட்டு அலகையாகி னரகை ஆள்பவர்களைப் பார்த்தே பயப்பட வேண்டும்.
**திருவசனம் : 39** பேறறிவாகிய ஆசான் வாய்மைக்குள் ஆகியவர்கள் தன் ஜீவனை காப்பாற்றிக் கொள்கிறார்கள். தன்னறிவில் சாய்பவர்கள் ஜீவனை இழக்கிறார்கள்.

**அதிகாரம் : 11 - திருவசனம் எண் :10** ரத, கஜ, துரக, பதாதிகள் என நால்வகை சேனா சைதன்யங்களை உடைய மனிதராய் இருந்தாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் எவ்வித லாபமும் இல்லை என்பதை இத்திருவசனம் உணர்த்துகிறது.

**ஐம்மணிப்பொதிகை : வேணும் விராட் பிரம்மமங்ஙே' ...**

*ஜீவசகோதரர் சங்கர்:* பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள் வான் கன்னி விராட் தவத்தில் அமர்ந்து அருள் பாலித்து கொண்டிருக்கிறார்கள். விராட் பிரம்மத்தை கண்டால் கலங்காத எமனும் கலங்கி கதறுவான் என்கிறது வேதம். அசைவற்ற குணக்குன்றாகிய பிரம்மத்தை தன்னுள் அறிந்து, விதி எழுத்தை துடைத்து மதி எழுத்தை பதிப்பிக்க வல்லவரே **ஆண்குரு.** அவர்தம் திருப்பாதம் பற்றியவரே தன்னுள் பஞ்ஞாட்சரமாக விளங்கும் ஆண் பெண்ணற்ற ஆன்ம ஒளியின் தரிசனை காண்பர். அத்தெய்வீக தரிசனம் கண்ட கயிலாய பரம்பரை இனத்தவர்க்கே திரிபுரமாகிய மும்மலம் கருகி முச்சுடர் தோன்றும். மேலும் கங்காளனாகிய சிவகுரு வரதரின் ஆகாய கங்கையில் நனைந்து மங்காத திருனீறு பூசிக் கொண்டவர்கள் சிவகதி அடைவது சத்தியமே என்ற பகிர்தல்களுடன் அவை இனிதே னிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**05-11-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

*ஜீவசகோதரர் கௌதம் :* தன்மயமாக்கும் தன்மை கொண்ட அக்கினியே இறைவனாக, ஜோதியாக, கழலாக, ஆதியாக, நம்மையும் தன் போலாக்கும் வல்லமை உள்ள குருவாக உள்ளது. எண்ணிலடங்கா எண்ணிற்குள் ஆக்கி, ஆதி மான்மியத்தை ஓத வைக்கும் உத்தியோவனராக நம்மை ஆக்கி வைப்பவரே குரு. தன்னறிவு கொண்டு அறிய முடியாத பேரின்பத்தை குருவின் தயவால்தான் அறிந்து அனுபவிக்க முடியும். இன்னில மாய்கையாலும் இடைஞ்ஞலின் வெட்கத்தாலும் நழுவிக் கொண்டே இருக்கும் மனமே னம்மை கீழ் ஏழ் உலகிற்கு இழுத்துச் செல்லும் அவித்தியா பாதமாக ஐம்புலன் வழியாக இயங்குகிறது. முக்குணங்களின் மூலமாக உண்டாகும் மூவினைகளின் தாக்கத்திலிருந்து நம்மை மீட்டு நிர்க்குணனாக மாற்றும் வல்லவரே குரு. நம் அகத்தில் அவர் அறிய வைக்கும் நற்றாளே, எழுதாத எழுத்தாக ஆறாவது அறிவாக உள்ளது. மாயக் கூத்தாகிய சரீரமெனும் சரிகின்ற இக்கடம் நீக்கி அக்கடத்துள் நம்மை ஆக்கி பிறவிப்பிணி தீர்க்கும் நாத மருந்தே ஆசானின் அருளமுதம். ஆசானின் தயவே, பஞ்சமா பாதகத்திலிருந்து நம்மை விலக்கி, அழியாப் பொருளாகிய ஏதுமிலா பரவெளியில் சேர்க்கிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அழியாத மெய்யாக அரூபமாக இருப்பதே சொரூபம். **என்னைனீ யறிவா யாகி லிப்பவே தருவேன் காண்பாய்** என ஆண்டவர்கள் அருளியுள்ளது காணக்கூடிய ஒன்றாகவும், அதில் பாய்கின்ற செயலாகவும் உள்ளது. நம்மிடம் நாம் செய்வதே பஞ்சமா பாதகம் என்பதையும் அதிலிருந்து மீளும் வழியையும் குருவருளால் தான் அறிய முடியும். இறைவனை அடைவதற்கான வழியில் செல்லும் பாடே இறை வழிபாடு. இதற்கு தடையாக இருக்கும் செயல்கள் யாவுமே பாசம் என்பதாகும். நினைவினுள் இருக்கும் நினைவை அறியும் செயலே பிரம்மவித்தை. ஓசை ஒளி வடிவாக இருக்கும் இறைவனை உணர்த்துவதே திருவிழாக்களில் நடக்கும் வான வேடிக்கை. குருவின் நாதமாகிய ஓசையே நம் அறியாமை அகற்றும் ஒளியான இறைவனாக உள்ளது. மெய்யான குருவின் அருள் பெறும் வசந்த காலத்தை நாமும் அனுபவிக்க அருள் பாலித்துக் கொண்டிருக்கும் பரிசுத்த ஆதி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்குவோம். ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**05-11-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

மெய்வழி ஆண்டவர்கள் அருளிய **பரமனே உருவெடுத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி அஞ்சனா:* ஆதி எனும் முதன்மையான ஜோதியே அறிவு வடிவான புள்ளியெனும் கூர். ஆசான் அருளும் பிரம்மவித்தை செயல் மூலமே நமது நித்திய ஜீவனை அறிந்து அறிவுத் தெளிவு பெற முடியும். ஞான சூரியனாக வரும் குருபிரானே நம் அறியாமை அகற்றி அறிவுத் தெளிவில் ஆக்குகிறார்கள்.

*ஜீவசகோதரி அன்னலட்சுமி:* செயல் உள்ளதே சமரசம். ஆசானின் நினைவில் நின்று சாதிப்பவர்களே சாதி. முதலாகிய உயிரை காலனிடமிருந்து காப்பவர் முதலியார். குருவின் சொல் கைக்கொண்டவர் கைக்கோளர். நம் ஜீவனைக் காக்கும் ஐயனே ஐயங்கார். குரு, தன் பிள்ளையாக ஏற்றுக் கொண்டவரே பிள்ளை. சக்கு எனும் குற்றமில்லாதவர் சக்கிலி. இறைவனுக்கு உறவானவன் குறவன். சாவை மணமாக ஆக்கிக் கொண்டவர் சமணர். மெய்ஞ்ஞானப் பயிர் விதைக்கும் ஆசானே வெள்ளாளர்.

*ஜீவசகோதரர் சுந்தரவடிவேல்:* கோவிலின் ஆகம விதிகள் உணர்த்தும் அகமிய செயல்கள் யாவும், ஆதி மார்க்க நீதி அவையின் அங்கத்தினராகி ஆசான் அருளால் தான் அறிந்து கொள்ள இயலும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் பாலசுப்பிரமணியன்:* குருவருளே இறைவனைக் காண்பதற்கான வழி. மாணிக்க வாசகப் பெருமான் அருளியவாறு கடவுள் செயல் அறியாதார் கருவாசலில் புகுவார். கடவுள் செயல் அறிந்தவர் பிறவானெறி பெறுவார் என்பதனை குருவருள் கொண்டே உணர முடியும்.

*ஜீவசகோதரர் கருப்பசாமி:* பொய்யும் மெய்யும் பிரித்தருளி, ஐவழி விளைவுக்கு அப்பாலுள்ள மெய்வழி காட்டும் குருவின் செயலை பொறுத்து வாய் மூடி காத்தால் நம் உணர்ச்சிகள் யாவும் உணர்வாகும் என்பதனை அனுபவத்தால் அறியலாம்.

*ஜீவசகோதரர் பாண்டி:* வித்து விளைந்ததின் அடையாளமான பழத்தின் மஞ்சள் நிறம் உணர்த்தும் தேவ ரகசியச் செயலே ஞானப் பழமாகிய பூரண மூலப்பழம் என்பதனை அருளும் குருபிரானே பழம் புராதனர்.

*ஜீவசகோதரர் பொன்செல்வம்:* அறிவு வடிவாக முக்காலங்களிலும் வரும் மெய்க்குருபிரான் அவர்களே நரனை மனுவாக்கி மெய்ஞான ராஜ பாட்டையில் அழைத்துச் செல்கிறார்கள். ஆசானின் விருப்பு சொர்க்கம், வெறுப்பு நரகம் எனும் அகமிய செயலை ஒரு மெய்க் குருபிரான் அருளால் தான் பெற முடியும்.

*ஜீவசகோதரர் பழனி செல்வராஜ்:* உடல் உள்ள போதே குருவின் தயவால் பெற வேண்டிய செயலே அடக்கம். நம்பிக்கையுடன் பழகித் தேறும் மெய்ஞான அனுபவமே பலன் தரும். வினை தீரும் போதே புண்ணியத்தின் உரு தோற்றரவாகி நம் மனக்கவலை தீரும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* குருவில்லா வித்தை பாழ். பிரம்ம வித்தையே வித்தை. **உப்பில்லா பண்டம் குப்பையிலே.** உப்பற்ற பொருள் கெடுவது போல் ஆசான் அருளால் உப்பின் உன்னதம் அறியாவிடில் நம் உடலும் கெடும். அவரவரிடத்தும் ஆசானாக விளங்கும் அறிவின் விருப்பே சொர்க்கமாகவும், மனதின் விருப்பே நரகமாகவும் உள்ளது. பெரியோர்கள் சொல்லும் பிரம்மவித்தை செயலை குலைத்து வாய் சிதறிடாமல் அறிவின் வழியில் நடப்பதே ஆதி மார்க்க னீதி அவையின் அடிநாதம் என்ற பகிர்வுடனும் ஆண்டவர்களின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 09-11-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

மெய்வழி ஆண்டவர்கள் அருளிய **பரிசு குருவே மறையின் தரிசனை பண்ணுருவே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** காற்றின் துணையோடு தீபம் ஒளிர்வது போல், மனித தேகத்திலும் சிவனெனும் ஜீவன், சக்தியாகிய காற்றின் துணையோடு இயங்கும் தன்மை அறிந்தவர்க்கு என்றும் தீபாவளியே.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் எண்-01 தொடர்ச்சி :** உயிர் வளர்க்கும் துளையான, கேட்கும் செவியுடையோரே அழியா செல்வத்தைப் பெறுகின்றனர். ஆசான் னாவிற்கு பெரிதாக உலகம் இல்லை என அறிந்திட செவி அறிவைப் பெற வேண்டும். செவியில் சுவை உணராதோர் ஐயறிவு விலங்கென்பர் பெரியோர். செவியில் சுவை உணர்ந்து வேத மாமறைகள் அருளும் உயிர்க் களிப்பின் உன்னதம் உணர்ந்த மக்களே, ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். **புகழுந்நிருக் கயிலைகுல பூபா...** தலைவனைக் குறிக்கும் ஒரு பரிபாஷையாக **பூபா** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அறம், பொருள், இன்பம் இவற்றை உள்ளடக்கி இருப்பதே *மெய்ப்பொருள் அடைக்கலப் பா.* தலையை காக்கும் செயலாகிய தர்ம செயலை அருள்பவரே தர்மதுரை.



Copyright © AMNA Trust, Chennai



*ஜீவசகோதரி பானுமதி :* **திருக்குரான்: அத்தியாயம் - 05 : அல்மாயிதா:** இந்த அத்தியாயம் ஹிஜ்ரி 6 மற்றும் 7-ஆம் நூற்றாண்டுகளில் மதீனாவில் அருளப் பெற்றவை. இதன் முதல் பத்து வசனங்கள் அனுமதிக்கப்பட்ட உணவு, தொழுகை, நீதி நேர்மையான நடத்தை பற்றி வர்ணிக்கிறது. **வசனம் - 02 :** இறை திருவருள் பெற எண்ணி புண்ணியத்தலம் (காபா) நோக்கிச் செல்வோரை இறை நம்பிக்கை கொண்டவர்கள் அவமதித்து சிரமம் கொடுக்கலாகாது. **வசனம் - 12,13:** இஸ்ராயீலின் வழித் தோன்றல்களிடம் அல்லாஹ், மார்க்க சட்டப்படி நீங்கள் நடந்தால் உங்கள் தீமைகளைப் போக்கி சுவனப் பூங்காக்களில் உங்களை நுழைவிப்பேன். இதற்கு மாறாக, நிராகரிப்பு போக்குடையோர் இராஜ பாட்டையை விட்டுப் பிறழ்ந்தவரே என்றும் கூறினான். **வசனம் - 87:** இறைவனால் அனுமதிக்கப் பெற்ற யாவும் **ஹலால்** என்றும், விலக்கப் பெற்ற யாவும் **ஹராம்** என்றும் விவரிக்கிறது. ஹராம் எனும் கீழான எண்ணம் யாவும் ஹலால் எனும் மேலான எண்ணமாக மாற்றப் பெறும் செயலை **ஹராமான கள்ளைமு றித்துவட் டாக்கிய லாலாக்கும் தன்மையைப்போல்...** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். **வசனம் 112 – 114 :** *அல்லாஹ்வே! எங்கள் அதிபதியே! வானத்திலிருந்து தங்களின் சான்றாக எங்களுக்கு ஆகாரம் வழங்குவாயாக! வழங்குவோரில் மிகச்சிறந்தவன் நீயே!* என இறைஞ்சினார். இதுவே **அல்மாயிதா** எனும் அர்ரஹ்மானாகிய இறைவன் அருளும், என்றும் குறையாத அட்சய பாத்திர அருளமுத வர்ஷிப்பு. இதனை நம் குலதெய்வம் சாலை ஆண்டவர்கள் தீர்ப்பு திருவசனத்தில், யோக உணவு என்ற தலைப்பில், ஓர் தூலக் குழந்தை உணவு உண்ணாவிடில் பிரேதமாகி விடுவது போல், மறுபிறப்புப் புகழுடம்பு பெற்றவர்கள் அறிவுக்கு ஆகாரமாகிய உவட்டா அமுதுணவு எனும் செவியுணவு அருந்தாவிடில் பொய்யுடம்பாகிவிடும் மகனே - உனக்கிது உஜார், என எச்சரிக்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** உலக மக்களை நன்னெறியின் பால் ஆக்கி வைக்கும் செயலுள்ள வார்த்தைகள் கொண்ட புனித நூலே அல்லாஹ்வின் வேதம்.

**ஐம்மணிப் பொதிகை:** அலீபு-லாம்-மீம், ஆதியே துணை, நந்தி, குரு, சொந்த தேகம், கங்காளன் பூசும் கவசத் திருநீறு, வெட்டாத சக்கரம், உணர்வு யாவும் உடல் கடந்து அறியும் உலகெனும் பஞ்ஞாட்சரமாக உள்ளது. சிவனை ஆச்சாரியாக கொண்ட சிவாச்சாரியார் யாவரும் மனிதனை பிரகாசிக்கிற மெய்யான ஒளியை அறிந்தவர்கள். பரிசுத்த ஆவி தெய்வத்தின் அருளுடனும், ஆசீர்பாதத்துடனும், ஆதி மார்க்க னீதி அவையின் சரவண நந்தவனம் தெளிந்த அறிவை வழங்கும் ஓர் தலமாக விளங்கும் என்ற குருபிரானின் அருளுரையுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*தனது பாததாமரையில் சகல சம்சார பந்நங்ஙளாகிய காட்டை யெரிக்கும் காலாக்கினியுடையவரும், பிரம்மரந்நிரத்தின் கண்ணுள்ள தாமரை னடுவிலிருக்கும் சந்திர மண்டலத்தை யுடையவரும், னித்தியமும், சுத்தமும், னிராபாசமும், னிராகாரமும், னிரஞ்ஞனமும், னித்திய போதமும், சிதானந்நமுமான பிரம்ம சுவரூபமான குருவை யான் னமஸ்கரிக்கின்றேன்.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**16-11-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்**

**குருபிரான் அருளமுதம்:**

ஒவ்வொரு மாதத்திலும் வரும் பண்டிகைகளின் உட்பொருள் ஆதார உயிர்ப்பதிப்பு இன்னதென அறிய வைக்கும் அறிவை அறிவிக்கும் அவையே ஆதி மார்க்க னீதி அவை. கார்த்திகை மாத தீபத் திருவிழாவின் ஜோதியானது, அவரவரது ஜீவனின் ரகசியமாக, காக்கும் தீயாக, முதற்பொருளாக, னந்தியாக, னடுவாக இருப்பதை உணர்த்துகிறது. இதைத் தன்னுள் அறிந்திட ஆசான் சொல்லுக்கு இலக்காகி அவர்கள் சொல்வதை பழகி வருவதே பத்தியம்.

**எமன்படர் அடிபடு திருமெய்ஞானகொரல் - வாக்கியம் 2 :** மரணமிலா பெருவாழ்விற்கே வினைமுதல்வன் வினைதீர்த்தான் என்ற னாமம் கொண்ட இறைவன் வேண்டும். கன்மமாகிய வினைப்போகத்திற்கு ஏற்றார் போல் வினையை அனுபவிக்க யானை முதல் எறும்பு வரையிலான தேகம் எடுத்து வருகிறோம். வினை முதல்வனாகிய இறைவன் தனது தீர்க்கதரிசியர்கள் மூலம் மக்கள் செவிமடுக்க அருளும் வினைதீர்க்கும் ரகசியமே வேதம். நம் அறியாமையால் சைத்தானான மனம் எனும் வினை தீர்ந்து சைதன்ய பிரம்மம் ஆவதற்கு அவரவருள் துப்புரவாக துலக்கும் ஆசானை அறிந்து சரணடைய வேண்டும். வினை தீர்க்கும் ஒரு செயலுக்கே தீர்த்தாரப்பன் எனும் இறைவன் வேண்டும். மனதை அறிவாக மாற்றும் பிரம்மவித்தை செயலையே மகாசங்கல்ப மந்திரம், எமவாதையை தடுக்கும் என்திறம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். பரமபத வாழ்வுக்கென பாரினில் வந்நவனே மனு.
**ஐம்மணிப் பொதிகை :** தென்திசையின் கைலாய அவுஷதத்தை தேசமக்கள் அறிந்து வாழ்வதற்கென ஆண்டவர்கள் அருளிய ஐம்மணிப் பொதிகையில் எல்லோரும் துறக்க வேண்டிய சரீரத்தின் அகமிய ரகசியம் பரிபாஷையாக அருளப்பெற்றுள்ளது. வேத கலைவாணி குடியிருக்கும் போதனாச்சாரியர் னாவில் முழங்கும் வரம்பிலா மெய்க்கல்வியின் பயன் னற்றாளை அடைவதே. அறுபுரி நூலாக அறுபடை வீடாக, விஸ்வரூப தரிசனை காட்டும் விபூதியாக, சர்வ மூலமந்திரங்களின் இருப்பிடமாக இருப்பதே பஞ்ஞாட்சரம். நரனாக அறியாமையில் நமசிவய என சொல்லித் திரிபவனை, செயலுள்ள நமசிவயத்தை அறியும் தேவனாக மாற்றும் குருதேவரே ஈசன். சோகம் மாற்றி அசோகத்தில் ஆக்கி, தலைகாக்கும் தர்மம் செய்யும் குருவின் செயலை உணர்பவனே உண்மையான சீடன். நடமாடும் ஜீவாத்மாவினுள் ஏகாட்சரமாக, எதார்த்த பரமாத்மாவாக, விளங்கும் பஞ்சாட்சரமாகிய அணுவில் அணுவனை அறிய வைக்கும் திருத்தலமே ஆதி மார்க்க நீதி அவை என்ற குருபிரானின் அருளமுதுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**18-11-2023 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

பாரமார்த்தீக ஞானத்தின் மூலம் அசுரனை சுட்டெரித்து, வேர்மேலும் தலைகீழாக னின்று விளங்கும் கற்பகத்தருவின் தேவ இரகசிய செயலை உணர்த்தி ஆத்மாவின் மீது காமம் உண்டாக்கி ஆத்ம காமனாக வாழவைக்கும் தேவத் திருச்செயலே சூரசம்ஹாரம் எனும் அசுரசம்ஹாரம்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் : 151** சுவர்ண லோகத்தில் வாழ பாக்கியம் பெற்ற மெய்ஞானப் பரம்பரையில் வரக்கூடிய பெரியோர்கள் குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பதை உணர்ந்து, தங்கம் போன்ற குணத்துடன், சகிப்பு தன்மையுடன் வாழ்ந்து ஞான சைதன்ய னெறியை உலகிற்கு பறை சாற்றுகிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் - லூகா அதிகாரம் 14 : 9**
*நான் உங்களுக்கு சொல்லுகிறதாவது, கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் திறக்கப்படும்.* எதை கேட்க வேண்டும்? எதை தேட வேண்டும்? எங்கு தட்ட வேண்டும்? எனும் இம் மகாவாக்கியம் மெய்ப்பொருள் குறித்தே அருளப்பெற்றுள்ளது. அறியாத மக்களுக்கு வேதப்பொருளை தொட்டுக் காட்டி, வேதத்துள்


Copyright © AMNA Trust, Chennai

பூட்டப் பெற்றுள்ள தேவ இரகசிய செயலை அருளிச்செய்து, பூட்டடங்கா சாவி கொண்டு பரமண்டலத்தை திறப்பித்து பிதாவை தரிசிக்க வைப்பரே **கர்த்தராகிய குருபிரான்**.

**குருபிரான் அருளமுதம் : ஐம்மணிப் பொதிகை**

ஆதி யுகத்தயனாம் ஆசானின் ஒரு மொழி கீதை மூலம் யுகாந்த நாட்டு செல்வமாகிய அருளைப் பெற்று, நான்மறையும் அங்கம்ஆறும் துலங்கப் பெறும் பெருநிலை வைப்பே ஐம்மணிப்பொதிகை. சுயம்பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபமாகிய பஞ்ஞாட்சர பொருளை தன்னுள் அறிய விரும்பார்க்கு, ஏட்டில் எழுதிய எழுத்தாகவும், அறிய விரும்புபவர்க்கு எழுதாத எழுத்தாக அறிவு ஒளிரும் கோடி சூர்யப் பிரகாசமாகவும் உள்ளது. மூன்றாவது கண் கொண்டு தரிசிப்பவர்களுக்கு சின்முத்திரை பலிக்க செய்து, பத்து வயதான கன்னியின் இரகசியம் அறிந்த குருகுலத்தவராக மாற்றுவதும் பஞ்ஞாட்சரமே. அதுவே பெருங்விரண அறுபுரினூல் புரளும் பிராணன் முளைத்து வரும் இடமாக, பிரம்மாண்ட அண்டம் தொட்டு பேசும், சர்வ வேத மாமறைகள் புகழும் பொருளாக உள்ளது. சிவகுரு வரதராகிய குருபெருமான் தாள் பணிந்து அவர்கள் அருளும் தென் திசையின் கயிலாய அவுஷதம் கொண்டே, பிரம்ம முடியுடன் கூடிய பிரணவ கயிற்றால் அவரவரிடம் கட்டப் பெற்றுள்ள சூட்சுமத்தை அறிய முடியும்.

*ஜீவசகோதரி சித்ரா :* பெரியோர்களின் நிறை னாதத்துள் சரணாகதி அடைந்தோரிடம் உள்ள குறைமதியானது, நிறைந்தொளிரும் கூரோங்கிய பஞ்ஞாட்சரமாக மாற்றப்பெறுகிறது. ஓம் எனும் பிரணவ சொரூபியாய், சத்தினி ஹபீபாய், உமை ஒரு பாகமாய் நின்று உலகை ரட்சிக்கும் லோக மாதாவாகிய குரு கொண்டலின் னாத பஞ்ஞாட்சரத்தை பற்றிக் கொண்டவர்களின் வினைகள் அகற்றப்பட்டு அழியாத னித்திய வாழ்வானது வரமாக அளக்கப்பெறுகிறது என்ற பகிர்தலுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**23-11-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**
**எமன்படர் அடிபடு திருமெய்ஞானக்கொரல்: திருவாக்கியம் எண்: 2 – தொடர்ச்சி..**

**இப்புவியோர் ஓதுகின்ற உபனிடத இதிகாசமெல்லாம் ஓர்ந்தும்**
**தப்பிதமாம் ஒப்பனைகள் பல கோடி தனிற் புகுந்து தயங்கியவெல்லாம்**
**ஒப்பரிய மதிக்கிரண மலை ஏறி ஓர் னிலையில் ஊன்றிப் பார்க்கச்**
**செப்பரிய மேம்பாடாம் மெய்வழியில் சேர்ந்திடுவீர் ஜகத்தினோரே**

என மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அறியாமையில் நாம் இருப்பதை உணர்த்தி, தெய்வம் எதற்கு வேண்டும் என்பதனை அறிவின் துணையோடு கவனிக்கவே இத்திருவாக்கியம் அருளப்பெற்றது. பயத்தின் மூலமே பெரியோர்கள் பக்தியை ஊட்டுகிறார்கள். குருவருளால் ஆறாவது அறிவை அறிந்தவன் அழிவதில்லை.

*ஜீவசகோதரர் வடிவேலன் :* சாலை ஆண்டவர்கள் அருளிய ஐம்மணிப் பொதிகை குருவின் அருள் பெறல் என்ற திருப்பாடலில் குரு, அருள், அதனைப் பெறுபவர் என மூன்று நிலைகளாகவும், இறை பொருளான பஞ்ஞாட்சரப் பொருளை, குரு - சீடனுக்கு வழங்கும் விதத்தையும் அருள்கிறார்கள். மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்றவரே அருளைப் பெற முடியும். உயிருள்ளதாக, இசைப்பதாக, பார்க்கும் ஒன்றாக, படைக்கும் ஒன்றாக பல நிலைகளில் பஞ்ஞாட்சரத்தை அருளியுள்ளார்கள். பாலினுள் உள்ள நெய்யை எடுக்க உதவும் உரை மோர் போல, அவரவருள் இருக்கும் இறைவனை அறிய மெய்க்குருவின் னாதத் தொனியான உரை வேண்டும். மனிதனின் வாக்கு-மன-மலம் பொடிவதற்கு ஆசானின் சக்ராயுத வாளாயுதம் ஓர்வகை, மூவகை, ஐவகை, எண்வகை பொறுப்புக்களை உள்ளடக்கி வருகிறது. தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், மகா காரணம் எனும் ஐவகை சந்தங்களாக, கர்த்தாக்கள்-5, சக்திகள் -5, பஞ்சபூதம் -5, நிறம் -5, சபை -5, வடிவம் -5, கலைகள் -5, புலன்கள் -5, பொறிகள் -5, தன் மாத்திரை -5 என இன்னும் பலவாக ஆசானின் னாதத் தொனியால் இவை யாவும் அருளப்பெறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குர்ஆன் - அத்தியாயம் 6 : அல்-அன்-ஆம்.** அறியாமை எனும் இருளில் இருந்து ஓங்காரம் எனும் தாய் மடியில் சேர்ப்பது குருவின் கருணை. இறைவனின் ஆற்றல், இறை தூதர்களின் வருகை, மறுமை வாழ்வு, நபிகள் நாயகத்தின் சூபித்துவம், ஓரிறைக் கொள்கை இவை யாவும் இந்த அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ளது. வசனம் 1,2,3 ல் எல்லாப் புகழும் இறைவனுக்கே எனவும், இவ்வுலக வாழ்வும் அறிவும் மனுவுக்கு இறைவன் கொடுத்தது தவணைக் காலமாகவும், அது முடிவதற்குள், மெய்ஆசான் கருணையால் அறிவு உடல் பெற்று நித்திய வாழ்வைப் பெற வேண்டியதாகவும் உள்ளது. லாஹிர்-பாத் என்பது இம்மை எனும் புற வாழ்க்கையாகவும், மறுமை எனும் அகமிய வாழ்க்கையாகவும் உள்ளது. ஆசானின் சிவபோகத்தின் மூலம் பெறும் மறுபிறப்பே மறுமை வாழ்க்கை.

*ஜீவசகோதரி ஸ்ரீ மகாலட்சுமி:* எழுதாத எழுத்தான வித்தில்லா வித்தான பஞ்ஞாட்சரமே சுவை, ஊறு, ஒளி, ஓசை, நாற்றம் என்ற உலகிற்கு தலைவனாக உள்ளது. பாவத்தை சுடும் குருவின் நாதமே பஞ்ஞாட்சரம். ஓம் எனவும், பற்று மற்றும் பற்றற்ற உள் ஞானக்கண்ணாக, சமரசப் பொருளாக, சர்வ தோற்றத்திற்கும் காரணப் பொருளான அனாதியாக உள்ளதே பஞ்ஞாட்சரம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* வினை தீரவும், மனம் சைதன்யமாகவும் குருவருள் வேண்டும். சர்வ தோற்றமும் அனாதியிலிருந்து தோன்றுவதனை, தியானத்திற்கு மூலமான குருவின் திரு உருவான நாத ஒலியால் அறியலாம். காலனை வெல்லும் காலாதீதன் ஆகிய குருவின் நாதமே நவக்கிரக கோள் மாற்றி பிறவிப்பிணி தீர்க்கும் பிரம்மவித்தையை அருள்கிறது. மனு ஒருவனே இதைப் பெறத் தகுதியானவன்.

**குருபிரான் அருளமுதம்: பஞ்ஞாட் சரமேனி படிந்நகுல தெய்வமதை னெஞ்ஞாரக் கண்டு தொழ னீணிலத்தில் வாச்சுதிங்நே...** னீணிலம் என்பது நன்னிலம், கையிலை நாடு என்பதாகும். பெரியோர்களின் அமுத நாவிலிருந்து வரும் தீதில்லாத சொல்லே நம் விதி எழுத்தை மாற்றி கைலாயம் சேர்க்கும் வல்லபமுள்ளது. ஐந்து எழுத்து மந்திரமாகிய சொந்த தேகத்துள் **ஓம்** எனும் பிரணவ மந்திரம் உணர்ந்தவனுக்கு காலன் என்ற பயங்கள் காணாமல் போகும். சிவசக்தி பாகமான ஊமை மூலமே பத்து வயதான கன்னித்தாய். இவை அனைத்தும் ஆதம் அலைஹு எனும் முதல் மனு தோன்றிய காலத்தில் இருந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது, என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**25-11-2023 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான் னமசிவ இருப்பறியான்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர் :* தம்பிரானாம் குருபிரானின் அருளமுதான செவியுணவே, அறுசுவை தேடி வாழ்நாளைப் போக்கும் வீணர்களின் நேசம் விட்டு நம்மைப் பாதுகாக்கிறது. அதுவே போன நாள் மீண்டங்நேறும் பிரம்மவித்தைச் செயல் மூலம் ஐந்தெழுத்து மந்திரமான நம் சொந்த தேகத்தில் நம்மை குடியேற்றி வைக்கிறது.

**குருபிரான் அருளமுதம்: கோடாயிதக்கூர் திருவாக்கியம் : 152** சர்வ மதங்களின் அடினாதம் மறலி கை தீண்டாத தங்க உடலில் குடியேறி வாழ்வதேயாகும். னித்திய மகிழ்ச்சி வாழ்வுக்குரிய ஜீவதேகமே தங்க உடலாக, நாம் தஞ்சமடையும் தஞ்ஞை மானகராக, மெய்வழி எனும் மேடாக, புகலிடமாக உள்ளதை குருவருளால் மெய்யுணர்வு பெற்ற மக்களே அறிவர். ஜீவனின் ரகசியம் விளக்காகவும் ஆன்மப் பிரகாசமான அதன் அசைவு தீபமாகவும், அதன் சுடர் ஜீவனின் வர்ணமான காவி நிறத்தையும் உணர்த்துகிறது. ஆண்டவர்கள் **சித்தத்தில் ஏற்றிய என் விளக்கே** என்றும், விளக்கு எரிய **தூண்டுகுரு னாதரனு போகம் வேண்டும்** எனவும் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கோபி:* **பகவத்கீதை - குணத்ரய விபாக யோகம் :** பரமாத்மா குணமற்றும் ஜீவாத்மா குணத்துடனும் உள்ளது. ஆத்மா ரஜோ, தாமச குணங்களால் மனதின் வழி சென்று நபுசாகவும், சாத்வீக குணத்தால் அறிவு வழி சென்று சிபத்தாகவும் உள்ளது. னிர்க்குணா அலங்கிர்தராம் குருபிரானின் சொற் குணத்தின் மூலமே னிர்க்குணமெனும் குணமற்ற சைவனிலையை அடைய முடியும். மெய்வழி ஆண்டவர்கள், **தௌஹீது மக்காமில்** குணங்களின் செயல்களும், அதனை னிர்குணமாக்கும் தவனிலை ரகசியங்கள் பற்றியும் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** குணங்களின் தன்மைக்கேற்ப ஒருவனை சகலர், விஞ்ஞானகலர், பிரளயகலர் என்கிறார் வள்ளல்பிரான். முக்குணம் விட்டு னிர்க்குண நிலை பெற்றவர்களே னீதியான பிரளயச் செம்மல்கள். உண்ணும் உணவு நீர் இதற்கு ஏற்ப குணங்கள் அமைகிறது. நாற்றத்தை விரும்பும் மூக்கறிவு அற்றவனுக்கு ஞானம் கிட்டாது. இறைவன் குணங்களை வைத்தே யாவற்றையும் படைக்கிறான். னாமம், ரூபம், நிறம், குறி யாவும் குணத்தில்தான் உள்ளது.

*ஜீவசகோதரர் குமார் :* **சத்தியவேதம் - ஜான் 7 : 24** *தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்.* அவரவர் குணங்களால் மாறுபட்டிருக்கும் புறத்தோற்றத்தின்படி தீர்ப்பு செய்வது அனீதியாகவும், குருவருளால் அகக்கண் கொண்டு காணும் நித்திய ஜீவன் குறித்த தீர்ப்பே நீதியாகவும் உள்ளது.

**ரோமன் 6 : 8** *கிறிஸ்துவுடன் நாம் மரித்தோமானால், அவருடன் கூடப் பிழைத்தும் இருப்போம்.* கர்த்தராகிய குருபிரான் பரிசுத்த ஆவியால் ஊதிய ஜீவசுவாசத்தால் நம் அறியாமை அகன்று **நான்** எனும் நாமத்திற்கான ஜீவனை அறிந்து மறுபிறப்பு எனும் அறிவுப்பிறப்பு பெற்றதையே மரித்தவர் பிழைப்பார் என அருள்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம் : குரு முறாதி :** கண்கண்ட கடவுளான குருவின் மீது வேண்டுகோள் தியானம் வைத்து பாடப் பெறுவதே குருமுறாதி. **முறாதியா முறாதியா முறாதி முறாதிமுகம்மது சாலிஹின்மேல் முறாதி** என பஞ்ஞாட்சரமேனி படிந்த குலதெய்வத்தை ஐந்து முறை முறாதி வைத்து வேண்டுகிறார்கள். இன்னூலின் பாடல்கள் அனைத்தும் காப்பாக, நமக்கு பாதுகாப்பாக அருளப்பெற்றுள்ளது. திருவெனும் இமையா நாடு கொண்ட ஒளி பொருந்திய திருமேனியரான குருபெருமான், நம் அறிவுக்கண் திறந்து குதாவெனும் இறைவன் அமானிதப்பொருளாக அவரவருள் இருப்பதையும், 12 ராசிகளிலும் ஞானசூரியனாக சஞ்சரிக்கும் ஜீவனின் ரகசியமும், வேர்மேலும் தலைகீழுமாக விளங்கும் தெய்வீக மாமரத்தின் வித்தின் சிறப்பையும் யோகத்தின் மூலமாக அறிய வைக்கிறார்கள். அமானிதமும் தவனிலை ரகசியமும் பொதிந்துள்ள, ராஜ அங்கமான பொருளே நூலின் கண்ணாக இருப்பதை உணர்ந்த மக்களே கைலாய பிராப்திக்கு உரியவர்கள் என்ற குருபிரான் அருளுரையுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**26-11-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**குருபிரான் அருளமுதம் :**
தன் காலத்திற்கு பிறகும், சிவனெனும் வாடாத தீபத்தை வேத வாயிலாக மக்கள் அறியும் பொருட்டே, நட்சத்திரம், திதி, ராசி, லக்கணம் என்ற காரண காரியங்களை பெரியோர்கள் வகுத்துள்ளார்கள். ஒரு தீபத்தின் வெளிச்சத்தை நம்மிடத்தில் உணர்த்தும் பொருளே சுயம்பிரகாசம். கதிரவனின் ஒளியால், ஒரு நாள் பிறப்பது போல், ஞான சூரியனாக வரும் ஆசான் தயவால் அறிவுப் பிறப்பில் நாம் பிறக்கும் பொழுதே நம் பிறப்பின் லட்சணம் அறிய முடியும். பஞ்ஞ பூதங்களின் தன்மையைப் பிரதிபலிக்கும் மனம், பஞ்ச பூதங்களுக்கு அப்பாற்பட்டதாக சார்ந்ததின் வண்ணமாக மாறக்கூடியது. அதில் மூடியிருக்கும் அறியாமை எனும் களிம்பானது ஓர் மெய் குருபிரான் ஊற்றும் ஜீவத்தண்ணீரால் கலையாகி, காட்சியாகி, னிலையாகி, பிரம்மாகிறது. எதார்த்த உள்ளத்துடன் ஆசானிடம் சரணாகதி அடையும் ஒருவனை, சரியை கிரியை எனும் படினிலைகள் கடத்தி, அகமியத்தை அறியும் யோகத்தில்



Copyright © AMNA Trust, Chennai 

ஆழ்த்தி தேவனாக்குகிறார்கள். இதனையே சாலை ஆண்டவர்கள் மாகசங்கல்பத்தில் அருளியுள்ளார்கள். **அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்** என வள்ளுவர் பிரானும் அருளியுள்ளார். அறிவெனும் ஜோதியை அவரவரிடத்தும் ஆசான் ஏற்றிய பின், தன்னை அறிந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து பிரகாசிக்கும் வழிபாடே நாம் வழிபடும் தீபத்திருனாள்.

*ஜீவசகோதரர் கௌதம் :* னூரொளியாகிய ஆசான் அவர்களே நமது அரக்கி, அரக்கர் குணம் விலக்கி, நமது னாமமான சுயம்பிரகாச ஆதி ஒளியான வாடாத தீபத்தில் இரண்டற கலக்க வைத்து னித்திய ஆனந்தத்தில் ஏற்றி வைக்கிறார்கள். சுடாத தீயாக, புகையாத கனலாக உள்ள வேதங்கள் உணர்த்தும் இறைவனின் பிரகாசத்தை ஒரு மெய்குருவின் மூலமே அறிய முடியும். எழுபரித் தேரோனாக வரும் ஆசான் தன் சிவச்செங்கோல் கொண்டு நம் அறியாமை எனும் இருள் விலக்கியதும், நம் சொந்த பூமியான சாலை விடிகிறது. இதனை சாலை ஆண்டவர்கள் **னல்ல னாட்பிறப்பு** எனும் பாடலில்,

**அழுத்தமுற் றிருந்ந இருட்குலம் னெரிய**
**அருக்கனென் றெழுபரித் தேரோன்**
**பழுத்தசெங் ளிரணக் கரங்ஙளா யிரமும்**
**பரப்பியே குணமுக டணுக**
**வெளுத்தது கிழக்கு னிலமதுந் நெளிய...** என அருளியுள்ளார்கள்.

கிருஷ்ண பரமாத்மாவான ஆசான், நம்மிடமுள்ள ஐந்து தலை விஷனாகத்தை, தன் காளிங்கனர்த்தன நடனத்தால் அழித்து, அவகாமத்தில் இருந்த நம்மை சிவகாமத்தில் ஆக்கி பரமபதத்தில் ஏற்றி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர் :* னிபுணமணி விளக்கான ஆசான் நம் சித்தத்தில் விளக்கேற்றி, அனித்திய தேகம் விட்டு னித்திய தேகத்தில் குடியேற்றி வாடாத தீபமாக விளங்கும் ஜீவனின் லட்சணத்தை உணரச் செய்கிறார்கள். ஸ்தோத்திரப் பாடலுடன் அவை னிறைவுற்றது.

## 29-11-2023 ~ புதன்கிழமை ~ சென்னை
## மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதார திருநாள் சிறப்பு அவை
## தொகுப்பு: ஶ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறிய வைத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

நிபுணமணி விளக்காக என் ஆசானாக வந்த பிரம்மத்தை அறிந்த மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதாரத் திருநாள் நவம்பர் 29, 1920. அன்னார், 1945 ஆம் வருடம் மெய்வழி ஆண்டவர்களுடன் தனது முதல் சந்திப்பின் போது வள்ளலாரின் **கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே** என்ற பாடலை ராகமாலிகா ராகத்தில் பாடிய பின்னர், தனது லட்சியம் விவேகானந்தர் போல் ஆக வேண்டும் எனவும் அதனால் திருமணம் செய்யவில்லை எனவும் தெரிவித்தார்கள். அதற்கு ஆண்டவர்கள் விவேகானந்தரின் குரு ராமகிருஷ்ணர் போல் திருமணம் செய்து வந்தால் சபையில் சேர்ப்பதாக தெரிவித்தார்கள். எனவே 1946ஆம் வருடம் திருமணம் முடித்து, தாயார், மனைவியுடன் சந்நிதி சென்றார்கள். தாயார், ஆண்டவர்களிடம் தனது ஊர் சென்னிப்பாளையம் என்றும், அங்கு ஒரு முறை இரண்டு சாமியார்கள் **ஆடையோ நனைந்ததில்லை, அங்கமோ நனைந்தது** என பேசிக்கொண்டு சென்றதைக் கண்டதாகவும் கூறினார்கள். ஆண்டவர்கள், தானும் தனது குருபிரானும் பேசிச் சென்றதைக் கண்ட, தாயா நீங்கள்? எனக் கேட்டு அதன் பின் சபையில் அங்ஙமாக்கி அருள் பாலித்தார்கள்.

இறைவனை நன்றாகத் தெரியும் என்ற எண்ணமே ஒரு நிஜமான பெரியோரை சந்திக்கும் வரை நம்மிடம் இருந்தது. **உள்ளம் பெருங்கோயில் ஊண் உடம்பு ஆலயம்** என பாடல் படித்தாலும் அதனை ஆராயும் அறிவு நம்மிடம் இல்லை. மனித தத்துவத்தின் சிறப்பை ஆகமம் எனும் அகமிய ரகசியம் மூலம் உணர்த்துவதே ஆலயங்கள். இறைவனின் தத்துவமாக நீ இருக்கிறாய் என உணர்த்துவதே **தத்வமஸி** எனும் மகா வாக்கியம். சகல உயிர் ஜீவனிலும்


Copyright © AMNA Trust, Chennai

ஆடும் திருப்பாதத்தினை அறியும் சக்தியும் அறிவும் மனிதனிடம் தான் உண்டு. அறியாமையுள் இருக்கும் அறிவை அறிய வைப்பதே பெரியோர்களின் செயல். **ஒரு திரு தரிசனை இருவினை போக்கிடும்.** அறிவுக்கண் திறந்தால்தான் தரிசனை என்பதன் செயல் விளங்கும். குருவருளால் மனதின் இருப்பிடம் அறிந்தவரே அதனை வசியம் செய்து தன்னுள் ஒன்பது வாசல் உள்தாளிடும் செயல் மூலம், **அடக்கம் அமரருள் உய்க்கும்** எனும் சன்மார்க்க நிலையை அறிவர். ஓயாத கடல் அலை போல் குழம்பும் மனதை சாந்தமாக்கும் செயலே பிரம்மவித்தை. மனிதனிடம் **சுடாத தீயாக புகையாத கனலாக** இருப்பதே இறைவன் அருளிய ஜோதியின் அம்சம். ஜோதியாக மனிதன் ஏற்றும் ஒரு விளக்கின் சுடர் பிரகாசமாக இருந்தாலும், அதன் வண்ணமோ மனித முயற்சிக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அருள் பாலிக்கும் நந்தியாக விளங்கும் மெய்வழி ஆண்டவர்களின் சொத்தாக விளங்குவதே அவர்கள் அருளிய வரம்பில்லா மெய்ஞானம்.



***மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா***

*ஜீவசகோதரர் வடிவேலன்:* குருவருளால் நரனிலிருந்து மனுவாகி, தேவராகி தேரைந்து மந்திரம் கைகொண்ட மெய்வழி ஆண்டவர்களின் அவதாரமே நம்மை இங்கு கூட்டி வைத்துள்ளது. அவரவருள் அகமியமாக நடக்கும் அவதாரத்தின் முதல் ஐந்து-நிலையின் மெய்க்கல்வியைப் பெற்றவர்களே அடுத்த ஐந்து-நிலைகளாக விளங்குகின்றனர். குருமலரில் வாசம் செய்யும் குருபிரானைச் சார்ந்த நாமே பூசாரியாகவும், அவர்களின் திருப்பாதம் சார்ந்து வாழ்வதால் பாதசாரியாகவும் உள்ளோம். ஒலியும் ஒளியுமாக பூவில் வாசம் செய்யும் கலைவாணி தெய்வம் அருளும் மெய்க்கல்வியை

**ஆத்தாளாய் வந்நெனக்கு அமுத மூட்டி**
**அனைத்தடிமை கொண்டஎன்றன் அம்மா அம்மா**
**பூத்தாளே வுலகமெலாம் னிறைந்து வீசப்**
**பூட்டிவிட்ட பெருங்கருணை மலையே யாகி**

என மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் நாமும் குருமலர் பாதம் போற்றி ஜென்ம சாபல்யம் பெறுவோமாக என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 05-11-2023 ~ ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகம் தீர்த்த தனிப்பெரும் கடலே...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**சாலைமா மணிச் சேகர யோகர்கள்**
**தேவரெ னமறை சாற்றவும் - இன்னு**
**மாவரெ லாமதென் றேற்றவும் - வினை**
**கொடிய மிடிமையிடர் கெடுமை கவலையிருள்**
**மடியும் உதயமதில்விடியும் சாலைனிலம் – சாலைமா**

என்ற **சேவடிச் சேகரம்** பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai	

**19-11-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **மவுன மாமணி மாடத்துள் ஏறவும்...** என்ற ஞான முறையீடு காப்புப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருகொண்டல் அவர்களின் வழி காட்டலின் படி

**சமரச வேதம் - சாலை**
**அமரர்கள் னீதம்**

**ஆதி மார்க்க னாத னீதி**
**சாதி பேதம் தீர்த்த சேதி - சமரச**

**சீறிப்பேதம் ஒன்றோ டொன்று**
**ஏறிக் கொலைகள் இரையும் னாளில்**
**னேரில் னீண்ட கம்பம் னாட்டி**
**ஏறிக் கொடியும் கூவிக் கூட்டும் - சமரச**

என்ற **செயலுடைச் சமரசம்** பாடல் வரிகள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**குரு வா ஆழ்க ! குருவே துணை !!**

*சிவசாசனத்தால் (ஆணையால்) குருவிற்கு மேலானதில்லை. சிவசாசனத்தால் குருவிற்கு மேலானதில்லை. சிவசாசனத்தால் குருவிற்கு மேலானதில்லை. சிவசாசனத்தால் குருவிற்கு மேலானதில்லை.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் 2023 – நவம்பர் மாத னிகழ்வுகள்

**29-11-2023: வெள்ளிக்கிழமை** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் முன்னிலையில் மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயாவின் அவதாரத் திருனாள் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.










## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்


| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **15-01-2024 / சிவகாசி** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் முன்னிலையில் பொங்கல் திருவிழா சிறப்பாக கொண்டாடப் பெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai 

## உற்றெழுத்து உணர்த்தல் – 5

உற்றெழுத்து உணர்ந்த மக்கள் அதனை வரும் **ஜனவரி 10**ம் தேதிக்குள் write2amnatrust@gmail.com முகவரிக்கு, அல்லது Whatsapp எண் +917305972399 அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். சரியான உற்றெழுத்தை அனுப்பிய முதல் 10 அன்பர்களின் பெயர்கள் புரந்தரர் பொன்னேடாக மின்னி வரும் மின்னணு சஞ்ஞிகையில் மின்னுவது திண்ணம்.



**இடமிருந்து வலம்:**

1) கந்தம் கமழும் பொருள்
3) சகலம்
9) தொட்டகுறை
10) உணவில் சேர்க்கும் கனிமம்
11) இது வாழ்வின் முடிவல்ல
12) முதுமை
16) மை
19) இவ்வகை பொறுப்புடையவர் அண்ணல்

**வலமிருந்து இடம்:**

4) அமர்ந்த நிலை நரசிம்மர்
7) "தி" சேர்ந்தால் அரசன்
8) சப்த ரிஷிகளில் ஒருவரின் மனைவி
15) நாவில் இருப்பது
17) இந்த கரம் பற்றியவரைக் கண்டு காலன் அஞ்சுவான்
21) வயல் சார்ந்த நிலம்



Copyright © AMNA Trust, Chennai

**மேலிருந்து கீழ்:**

1) ஆழ்வார்களுள் ஒருவர்
2) குணம்
3) புலன்கள் செய்வது
5) இக் குலம் ஒயும் வரை மனம் ஓயாது.
8) இப்படியான வேகம் கொண்டது மனோகதி
14) ஏழு பருவங்களுள் ஒன்று

**கீழிருந்து மேல்:**

6) மலர்களின் தொகுப்பு
10) உத்தியோகம்
13) மனிதனிடம் இது மூன்றாக உள்ளது
15) பாங்கி
18) உயர்ந்த நாமம்
20) பிரிவு
21) எல்லோரும் விரும்புவது

குறிப்பு: உற்றெழுத்து அனுப்பும் வழிமுறை: கட்டம் வரைந்து அனுப்பாமல், "இடமிருந்து வலம்.... கீழிருந்து மேல்" என்ற தலைப்புடன் அதற்குரிய எண்ணும் பதிலுமே போதுமானது.

**நவம்பர் மாதம் 2023 வெளியான**
**உற்றெழுத்து உணர்த்தல் – 4: விடை**

**இடமிருந்து வலம்:**
1) கிரந்தம் 7) கடை 8) மன் 10) குபம்ம் 13) கலம் 14) ஏழடுக்கு 23) ஊழியேனும் கோள் 24) கள்

**வலமிருந்து இடம்:**
6) பந்தம் 9) பெருமான் 12) னிம்ருலஇ 16) வெள்ளி 17) ஊண் 19) உஜூது 21) இருளறு மொழி

**மேலிருந்து கீழ்:**
1) கிழக்கு 2) ந்கதம் 3) நடை 4) ம்மருல 5) தன் பெருவெளி 6) பங்குனி 11) பங்ழ 18) ஏறு 21) இருள் 22) மனு

**கீழிருந்து மேல்:**
15) குல 17) ஊக்கம் 20) ருஅள் 23) ஊதூது

**சரியான உற்றெழுத்தை அனுப்பிய அன்பர்கள் –**

ஜீவிதா
சித்ரா
கல்பனா
சுமதி



Copyright © AMNA Trust, Chennai

**2023 நவம்பர் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்**

மாதவன்
ஸ்ரீமா
மகிமா
சபிதா
கிருத்திகா
வடிவேலன்
தனராஜன்
ஜெயப்பிரகாஷ்
புன்னகை
செல்லம்மா
சுந்தர்
மஞ்சுநாதன்
ராஜமகேஷ்
முருகன்
வளவன்
இன்பலதா
தியாகராஜன்
மோகன் சித்ரா
கிரிதரன்



உமாராணி
பாஸ்கர்
கிரகதுரை
மோகன்ராம்
அஞ்சனா
காளிராஜன்
சுந்தரவடிவேல்
கவிதா வெங்கட்
வைஷ்ணவி
பழனி செல்வராஜ்
பழனிகுமார்
நாகமணி
கற்பக கனி
மகேஷ். மதுரை
கார்த்திகேயன். ஆவடி
ராஜேந்திரன். சென்னை
சீனிவாசன். சென்னை
சசி. மிட்டபள்ளி

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு****: இம்மின்னணுச்சஞ்ளிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 29 – Month: December 2023*